## அருள்மிகு கள்ளழகர் திருக்கோயில், அழகர்கோயில், மேலூர் வட்டம், மதுரை மாவட்டம்
## வேலைவாய்ப்பு அறிவிப்பு

ந.க.எண். 1158/2021/அ5 நாள்: 07 .07.2021

மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், அழகர்கோயில் அருள்மிகு கள்ளழகர் திருக்கோயில் மற்றும் அதன் உபகோயில்களில் காலியாக உள்ள கீழ்காணும் விபரப்படியான காலிப்பணியிடங்களை நேர்காணல் மூலம் தெரிவு செய்வதற்கு இந்து சமய அறநிலைய சட்ட விதிகளுக்குட்பட்டு உரிய தகுதிவாய்ந்த இந்து மதத்தை சேர்ந்த விண்ணப்பதாரர்களிடமிருந்து மட்டும் **09.08.2021 மாலை 5.45 மணிக்குள்** விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

| வ. எண். | பதவியின் பெயர் | காலிப்பணியிட எண்ணிக்கை | சம்பளவிகிதம் | குறைந்தபட்ச கல்வித்தகுதி |
|---|---|---|---|---|
| 1 | நாதஸ்வரம் | 1<br>(ஒன்று மட்டும்) | ரூ.19500/–<br>(level-25) மற்றும் இதர படிகள் | i) தமிழில் எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும்<br>ii)அறநிறுவனங்கள்/அரசு/அரசால் அங்கீகரிக்கப் பட்ட/அங்கீகாரம் பெற்ற இசைப்பயிற்சி பள்ளியில் பயின்றதற்கான சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும் |
| 2 | சுப்ரபாதம் | 1<br>(ஒன்று மட்டும்) | ரூ.15,700/–<br>(level-16) மற்றும் இதர படிகள் | i) தமிழில் எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும்<br>ii)அறநிறுவனங்கள்/அரசு/ஏனையோர்களால் நடத்தப்படும் ஆகம பள்ளி அல்லது வேதபாடசாலையில் ஓராண்டு பயின்றதற்கான சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும் |
| 3 | வேதபாராயணர் | 2<br>(இரண்டு மட்டும்) | ரூ.15,700/–<br>(level-16) மற்றும் இதர படிகள் | i)தமிழில் எழுதபடித்திருக்க வேண்டும்.<br>ii)அறநிறுவனங்கள்/அரசு/ஏனையோர்களால் நடத்தப்படும் ஆகம பள்ளி அல்லது வேதபாடசாலையில் மூன்றாண்டு பயின்றதற்கான சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும். |
| 4 | ஓட்டுநர் | 2<br>(இரண்டு மட்டும்) | ரூ.18500/–<br>(level-22) மற்றும் இதர படிகள் | i) 8ம் வகுப்பு தேர்ச்சி (அல்லது) அதற்கு இணையான அரசால் அங்கீகாரம் பெற்ற தேர்வில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும். ii).இலகுரகம் அல்லது கனரக வாகன ஓட்டுநர் உரிமம் மற்றும் முதலுதவி சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும். iii) ஓட்டுநராக பணியாற்றியதற்கான ஒரு வருடம் முன் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். |
| 4 | பாரா<br>(காவலர்) | 10<br>(பத்து மட்டும்) | ரூ.15900/–<br>(level-17) மற்றும் இதர படிகள் | தமிழில் எழுதப்படிக்க தெரிந்திருக்க வேண்டும் |
| 5 | துாா்வை | 2<br>(இரண்டு மட்டும்) | ரூ.10000/–<br>(level-10) மற்றும் இதர படிகள் | தமிழில் எழுதப்படிக்க தெரிந்திருக்க வேண்டும் |

**நிபந்தனைகள்:**

1 விண்ணப்பதாரர் 01.07.2021 அன்று 18 வயது பூர்த்தியடைந்தவராகவும் 35 வயது மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.
2 இந்து மதத்தை சார்ந்தவராகவும் இறைநம்பிக்கை உடையவராகவும் இருத்தல் வேண்டும்.
3 ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனியாக விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டும்
4 விண்ணப்பத்துடன் கல்வித்தகுதிக்குரிய சான்றிதழ்கள் மற்றும் கூடுதல் கல்வித்தகுதிக்கான சான்றிதழ்கள் மற்றும் ஆதார்,வாக்காளர் அடையாள அட்டை, குடும்ப அட்டை போன்ற பிறஆவணங்களுக்கு சான்றிட்ட ஜெராக்ஸ் நகல் மட்டுமே அனுப்பப்பட வேண்டும். அசல் சான்றிதழ்கள் எக்காரணத்தினை முன்னிட்டும் அனுப்பக்கூடாது.
5 விண்ணப்பதாரர் வயதுக்கான சான்றாவணம் அல்லது கல்வி நிலையத்தால் வழங்கப்பட்ட மாற்று சான்றிதழ் நகல் (TC) இணைக்கப்பட வேண்டும்
6 விண்ணப்ப படிவத்தில் விபரங்கள் முழுமையாக பூர்த்தி செய்யப்படாமலும் கேட்கப்பட்ட சான்றுகள் இணைக்கப்படாமல் பெறப்படும் விண்ணப்பங்கள் ஆரம்ப நிலையிலேயே நிராகரிக்கப்படும்
7 தேர்ந்தெடுக்கப்படும் பணியாளர் இத்திருக்கோயிலின் உபகோயில்களுக்கும் மற்றைய பணிகளுக்கும் பணியிட மாறுதல் செய்யப்படுவார்.
8 விண்ணப்பதாரர் வசிக்கும் எல்லைக்குட்பட்ட காவல்நிலையத்தில் விண்ணப்பதாரர் மீது எவ்வித குற்றவியல் நடவடிக்கைஏதுமில்லை என்ற சான்றிதழ் (கண்டிப்பாக விண்ணப்பத்துடன் அசல் சான்றிதழ்) இணைக்கப்பட வேண்டும்.
9 விண்ணப்பங்களை அனுப்பும்போது மேல் உறையின் மீது பதவியின் பெயரை குறிப்பிட்டு நேரிலோ அல்லது அஞ்சல் மூலமாகவோ அனுப்பப்பட வேண்டும்
10 .நேர்முகத்தேர்வில் கலந்து கொள்வதற்கு எவ்வித பயணப்படியும் வழங்கப்படமாட்டாது.
11 விண்ணப்பதாரர் விண்ணப்பத்தில் குறிப்பிடப்படும் கல்வித்தகுதி மற்றும் பிறஆவணங்களுக்குரிய அசல் சான்றிதழ்களை நேர்முகத்தேர்வின்போது கண்டிப்பாக கொண்டு வரப்படவேண்டும்.
12 விண்ணப்பதாரரால் தெரிவிக்கப்படும் விபரங்கள் அனைத்தும் சரியானவை என உறுதியளிக்க வேண்டும். தவறான தகவல்கள் அல்லது போலியான ஆவணங்கள் ஏதேனும் அளித்து பணி நியமன ஆணை பெறப்படும் பட்சத்தில் எவ்வித முன்னறிவிப்புமின்றி பணி நீக்கம் செய்தும், சட்ட ரீதியான குற்றவியல் நடவடிக்கைகளுக்கும் உட்படுத்தப்படுவர்.
13 நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவிற்குள் பெறப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே பரிசீலனைக்கு ஏற்றுக்கொள்ளப்படும். மேலும் தகுதியான விண்ணப்பங்கள் மட்டுமே பரிசீலனைக்குப்பின்னர் நேர்முகத்தேர்விற்கு அழைக்கப்படுவர்.
14 விண்ணப்பதாரர்களால் வழங்கப்படும் சான்றுகள் அனைத்தும் சம்பந்தப்பட்ட துறைகளின் உண்மைத்தன்மை குறித்து பரிசீலனைக்கு உட்படுத்தப்படும்.
15 விண்ணப்பத்தின் விலை ரூ.100/– திருக்கோயில் அலுவலகத்தில் நேரில் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
16 பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் விண்ணப்பத்திற்கு கட்டணம் செலுத்திய இரசீது நகல் இணைக்கப்பட வேண்டும்.
17 பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வந்து சேரவேண்டிய கடைசி நாள். 09.08.2021.
18 தொற்றுநோய், உடல் மற்றும் மனநிலை குறைபாடுகள் உள்ளவர்கள் விண்ணப்பிக்க தகுதியற்றவர்கள்.
19 திருக்கோயிலுக்கு எதிராக வழக்கு தொடர்ந்தவர்கள், அவர்களின் வாரிசுதாரர்கள், அரசு பணி மற்றும் பொது நிறுவனங்களிலிருந்தும், இதர திருக்கோயில்களிலிருந்தும் பணிபுரிந்து தண்டனை காரணமாக பணி நீக்கம் செய்யப்பட்டவர்கள் விண்ணப்பிக்க தகுதியற்றவர்கள்.
20 உரிய முறையில் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் மற்றும் சான்றிதழ் நகல்கள் இணைக்கப்படாத விண்ணப்பங்கள் காரணம் தெரிவிக்கப்படாமல் நிராகரிக்கப்படும்
21 வரிசை எண்.4ஐ தவிர மற்ற பணியிடங்களுக்கு தமிழில் சிறிய அளவில் எழுத்துத் தேர்வு நடத்தப்படும்.
22 வேலைவாய்ப்பு அறிவிப்பினை www.alagarkoil.org என்ற திருக்கோயில் இணையதளத்திலும் தெரிந்துகொள்ளலாம்.
23 தெய்வீகத்தாலும் இராஜ்ஜியத்தாலும் ஏற்படும் மாற்றங்களுக்கு நிர்வாகம் பொறுப்பல்ல.
24 திருக்கோயில் அலுவலக நேரத்தில் விண்ணப் படிவத்தினை உரிய தொகை செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
25 விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி: **துணைஆணையர்/செயல்அலுவலர், அருள்மிகு கள்ளழகர் திருக்கோயில், அழகர்கோயில் 625 301, மேலூர் வட்டம், மதுரை மாவட்டம்**

| | |
|---|---|
| **வி.ஆர்.வெங்கடாஜலம்**<br>**தக்கார்** | **தி.அனிதா, பி.ஏ., பி.எல்.**<br>**துணை ஆணையர்/செயல் அலுவலர் (கூ.பொ)** |